தூத்துக்குடி புதிய பேருந்து நிலைய வளாகத்தில், தூத்துக்குடி மாநகராட்சி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் புதிதாக ரூ.1024 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள நல அடுக்கு வாகனங்கள் நிறுத்துமிடம், ரூ.900 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலைய பகுதியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கான சீர்மிகு பணிமனை, ரூ.140 இலட்சம் மதிப்பில் சிவந்தாகுளம் பகுதியில் சென்சரி பார்க், ரூ.1177 இலட்சம் மதிப்பில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம், ரூ.207 இலட்சம் கதிர்வேல்நகர் பகுதியில் வளமீட்பு மையம், ரூ.181 இலட்சம் மதிப்பில் இளங்கோவடிகள் பூங்கா, ரூ.704 இலட்சம் மதிப்பில் சலவைக்கூடம், ரூ.372 இலட்சம் மதிப்பில் 14 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மற்றும் ஆய்வகம், ரூ.200 இலட்சம் மதிப்பில் மாநகராட்சிக்கு உட்பட்ட பழமை வாய்ந்த கட்டிடங்களை பழமை மாறாமல் புதுப்பித்தல், ரூ.212 இலட்சம் மதிப்பில் கிருபைநகர் பூங்கா, ரூ.140 இலட்சம் மதிப்பில் அம்மூவனார் பூங்கா, ரூ.180 இலட்சம் மதிப்பில் உமறுபுலவர் பூங்கா, ரூ.126 இலட்சம் மதிப்பில் ஔவையார் பூங்கா, ரூ.327 இலட்சம் மதிப்பில் ஓம் சாந்தி நகர் பூங்கா, ரூ.248 இலட்சம் மதிப்பில் செல்சீனி பூங்கா, ரூ.110 இலட்சம் மதிப்பில் ஜி.யு.போப் பூங்கா ஆகியவற்றை அமைச்சர் கே.என்.நேரு, பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன், அமைச்சர் பெருமக்கள் கீதா ஜீவன், அனிதா இராதாகிருஷ்ணன், கனிமொழி கருணாநிதி எம்.பி., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலர் ஷிவ்தாஸ் மீனா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் தினேஷ்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாலாஜி சரவணன், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் பிரம்மசக்தி, மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மற்றும் தி.மு.க. கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில் , கூடுதல் தலைமை செயலர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) சிவ்தாஸ் மீனா முன்னிலையில், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 11 ஒன்றியங்களைச் சார்ந்த 1286 குடியிருப்புகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி மற்றும் கயத்தாறு ஒன்றியங்களைச் சார்ந்த 45 வழியோர குடியிருப்புகளுக்கான ரூ .1387.73 கோடி மதிப்பிலான கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி , ரூ .48.39 கோடி மதிப்பில் சாத்தூர் நகராட்சியில் முடிவுற்ற பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் ரூ .251.20 கோடி மதிப்பில் இராஜபாளையம் நகராட்சியில் முடிவுற்ற பாதாள சாக்கடைத் திட்டங்களை தொடங்கி வைத்தார்கள் .

112 பத்திரிகையாளர்களுக்கு நலவாரிய உறுப்பினர் அட்டை!

ரூ.2.50 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

சிவகங்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

சிவகங்கை, மே 28-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் பத்திரிகையாளர்கள் நல வாரிய உறுப்பினர் 112பேர்களுக்கு அடையாள அட்டை, கழக அரசின் ஈராண்டு சாதனை மலர் வெளியீட்டு விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர் ப. மணிவண்ணன் வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் கழக அரசின் ஈடில்லாஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை மலரை வெளியிட்டும் 112 பத்திரிகையாளர்களுக்கு நல வாரிய உறுப்பினர் அடையாள அட்டை வழங்கியும்243பயனாளிகளுக்கு ருபாய்2கோடியே 62லட்சம் மதிப்பிலான பல்வேறு துறைகளின் சார்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன்பேசியதாவது.

கழக தலைவர் முதல்வர் தளபதி தலைமையிலான அரசு இரண்டு ஆண்டுகளை முடித்து மூன்றாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு சாதனைகளை செய்துள்ளது. பேரறிஞர் அண்ணா ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம் என்றார். அதுவே கழகத்தின் கொள்கை என்றார். அதையே தலைவர் கலைஞர் அவர்களும் பின்பற்றினார். கழக தலைவர் கலைஞர் வழியில் இந்த ஆட்சியை முதல்வர் தளபதி அவர்கள் சிறப்பாக நடத்தி வருகிறார். இந்த அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் மக்களுக்கு பல்வேறு உதவிகள், மக்கள் பயன்பெறும் வகையில் திட்டங்களை நிறைவேற்றி உள்ளது.

தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளையும்,கொடுக்காத வாக்குறுதிகளையும் இந்த அரசு நிறைவேற்றி உள்ளது. தமிழகத்தை இந்தியாவில் முதல் மாநிலமாக மாற்ற வேண்டும் என்றுமுதல்வர் தளபதி அவர்கள் விரும்பி செயல்பட்டு வருகிறார். அதற்கான பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். அனைத்து அரசு துறைகளையும் இதற்காக முடுக்கி விட்டுள்ளார். தற்பொழுது தமிழகத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும் தொழில்களை பெருக்கிடவும் சிங்கப்பூர் ஜப்பான் நாடுகளுக்கு வெளிநாட்டு பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்த பயணம் வெற்றிகரமாக அமையும். இதனால் தமிழகத்தில் தொழில் வளம் பெருகும். பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். பத்திரிகையாளர்கள் பணி மகத்தான பணியாகும். பல்வேறு செய்திகளை உலகிற்கும் மக்களுக்கும் தெரிவிப்பது பத்திரிகையாளர்களின் கடமையாகும். நெருக்கடியான சூழ்நிலையில் அவர்கள் பணியாற்றிவருகிறார்கள்.

கடந்த கொரோனா காலத்தில் பத்திரிகையாளர்கள் கடுமையாக உழைத்தார்கள். இதில் ஒரு சில பத்திரிகையாளர்கள் பலியானார்கள். அவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் தளபதி அவர்கள் ரூபாய் 10லட்சம் நிதி உதவிவழங்கினார். தலைவர் கலைஞர் முதலில் பத்திரிகையாளராகத் தான் வாழ்க்கையை துவங்கினார். பன்முகத் தன்மை கொண்டவராக தலைவர் கலைஞர் விளங்கினார். தமிழ் மொழி இனத்தை பாதுகாக்க கலைஞர் அவர்கள் பாடுபட்டார் . அதே வழியில் நம் முடைய தலைவர் தளபதி அவர்களும் மொழி, இனம், உரிமைக்காக பாடுபட்டு வருகிறார். இதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார். நிகழ்ச்சியில் எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ.மாவட்ட கவுன்சிலர் நாகனி செந்தில்குமார், திருபுவனம் பேரூராட்சி மன்றத் தலைவர். த.சேங்கை மாறன் காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவர்

கே.எஸ்.எம். மணிமுத்து, நகர்மன்றத் தலைவர் துரை ஆனந்த், ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி மஞ்சுளா ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். இந்த நிகழ்ச்சியில் நகர்மன்ற துணைத் தலைவர் கார்கண்ணன்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ரத்தினவேலு கூட்டுறவு இணைப் பதிவாளர் திருமதி ஜுனு சிவகங்கை கோட்டாட்சியர் சுகிதா உட்பட அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை

மாணவர் நலனில் அக்கறையுடன் செயல்படுகிறது!

"தினகரன்" தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மே 28-

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை மாணவர் நலனில் அக்கறையுடன் செயல்படுகிறது என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:

தமிழகத்தில் கடந்த கல்வி ஆண்டுக்கான வகுப்புகள், ஏப்ரல் 28ம் தேதி முடிந்து, ஒரு மாத காலம் கோடை விடுமுறை விடப்பட்டுள்ளது. கோடை வெயில் உச்சத்தில் இருப்பதால், விடுமுறையை நீட்டிக்க வேண்டும் என்று பெற்றோர்களும், கல்வியாளர்களும் வேண்டுகோள் விடுத்தனர். இருப்பினும், திட்டமிட்டபடி பள்ளிகள் திறக்கப்படும் என பள்ளி கல்வித்துறை அறிவித்தது. கோடையின் உக்கிரம் தொடர்ந்து நீடிப்பதால், பள்ளி திறப்பை குறைந்தபட்சம் ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் தள்ளிவைக்க வேண்டும் என்றும் கோரிக்கை வலுத்தது. ஆனால், ஏற்கனவே திட்டமிட்டபடி 6 முதல் 12ம் வகுப்பு வரை ஜூன் 1ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும், 1 முதல் 5ம் வகுப்பு வரை ஜூன் 5ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்ற நிலைப்பாட்டில் தமிழக பள்ளி கல்வித்துறை உறுதியாக இருந்தது.

தினகரன்

மே 27, 2023 சனிக்கிழமை

மாணவர் நலனில் அக்கறை

தமிழகத்தில் கடந்த கல்வி ஆண்டுக்கான வகுப்புகள், ஏப்ரல் 28ம் தேதி முடிந்து, ஒரு மாத காலம் கோடை விடுமுறை விடப்பட்டுள்ளது. கோடை வெயில் உச்சத்தில் இருப்பதால், விடுமுறையை நீட்டிக்க வேண்டும் என்று பெற்றோர்களும், கல்வியாளர்களும் வேண்டுகோள் விடுத்தனர். இருப்பினும், திட்டமிட்டபடி பள்ளிகள் திறக்கப்படும் என பள்ளி கல்வித்துறை அறிவித்தது. கோடையின் உக்கிரம் தொடர்ந்து நீடிப்பதால், பள்ளி திறப்பை குறைந்தபட்சம் ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் தள்ளிவைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது.

ஆனால், ஏற்கனவே திட்டமிட்டபடி 6 முதல் 12ம் வகுப்பு வரை ஜூன் 1ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும், 1 முதல் 5ம் வகுப்பு வரை ஜூன் 5ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்ற நிலைப்பாட்டில் தமிழக பள்ளி கல்வித்துறை உறுதியாக இருந்தது. தமிழகம் முழுவதும் 12 மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு வெளியிட்டது. ஆனால், இதுவரை பெரிய அளவில் மழை பெய்யவில்லை. கோடை வெப்பமும் குறையவில்லை. இந்நிலையில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுடன், தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று ஆலோசனை நடத்தினார். இதன்பின்னர், ''தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி, வருகிற ஜூன் 7ம் தேதி ஒட்டு மொத்தமாக அனைத்து வகுப்புகளுக்கும் பள்ளிகள் திறக்கப்படும்'' என அறிவித்தார்.

''கோடை விடுமுறை என்பது மாணவர்களை ஆசுவாசப்படுத்தக்கூடிய காலம், கோடை விடுமுறை காலத்திலும் மாணவர்களுக்கான பாடங்களை நடத்துவதை தனியார் பள்ளிகள் தவிர்க்க வேண்டும். இதை வேண்டுகோளாக முன்வைக்கிறேன். ஆங்கில பயிற்சி, நீச்சல் பயிற்சி, விளையாட்டு போன்ற திறமைகளுக்கான காலமாக கோடை விடுமுறையை பயன்படுத்த வேண்டும். இதற்கு, தமிழ்நாடு அரசு ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கி கொடுத்துள்ளது'' என அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவித்துள்ளார். மாணவர் நலனில் அக்கறையுடன் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவிப்பு, பள்ளி மாணவர்களுக்கு பெரும் 'குட் நியூஸ்' ஆக அமைந்துள்ளது.

ஒரு குழந்தையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில், அக்குழந்தையின் வளரும் ஆண்டுகள் முக்கியமானவை. இந்த ஆண்டுகளில்தான் குழந்தைகள் சிறந்த, வலிமையான நபர்களாக உருவாக ஒரு வலுவான அடித்தளம் அமைக்கப்படுகிறது. ஒரு குழந்தையின் ஆளுமையை, வடிவமைப்பதில் பள்ளிக்கல்வி மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மாணவர்கள், கல்வியில் சிறந்து விளங்குவதோடு, தங்களது உடல்நலத்தையும் பேண வேண்டியது அவசியமாகிறது. போட்டி நிறைந்த இவ்வுலகில் கல்வியறிவுடன், உடல் திறனையும் சீராக மேம்படுத்துவது ரொம்பவே முக்கியம்.

மாணவர்கள், தங்களது படிப்பின் ஒரு பகுதியாக அன்றாடம் உடல்சார்ந்த பயிற்சிகளை மேற்கொண்டு வரும்பட்சத்தில், மன அழுத்தம் குறைந்து விடுகிறது. கற்றல் திறன் மேம்படுகிறது. உடல் சார்ந்த பயிற்சிகளுடன் யோகா, நடனம் போன்றவையும் இடம்பெற வேண்டும். இவை, மன அழுத்தம் மட்டுமின்றி, சோர்வு, கொந்தளிப்பு, ரத்த அழுத்தம், பதற்றம், கவலை, விரக்தி போன்ற எல்லா தொந்தரவுகளில் இருந்தும் விடுதலை தருகிறது. எனவே, விடுமுறை நீட்டிப்பு என்ற இந்த வாய்ப்பை மாணவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில்

அமைச்சர்கள் ராஜகண்ணப்பன்-மனோதங்கராஜ் முன்னிலையில்

இராதாபுரத்தில் ரூ.605.75 கோடியில் குடிநீர்த் திட்டப் பணிகள்!

அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தார்!

நெல்லை, மே 28-

நெல்லை மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் இராதாபுரத்தில் ரூபாய் 605.75 கோடி மதிப்பில் நடைபெறும் குடிநீர் திட்ட பணிகள் துவக்க விழா நிகழ்வு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் பிற்படுத்தப்பட்ட நலத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று துவக்கி வைக்கிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் நெல்லை மாவட்டம் இராதாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் இராதாபுரம், வள்ளியூர்,நாங்குநேரி,களக்காடு, பாளையங்கோட்டை மற்றும் சேரன்மகாதேவி ஆகிய 6 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூபாய் 605.75 கோடி மதிப்பிலான கூட்டு குடிநீர் திட்டப் பணியும் , கல்லிடைக்குறிச்சி மற்றும் முக்கூடல் பேரூராட்சிகளில் ரூபாய் 3.21 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகள் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர்கிராம தொழில் வாரிய அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஷிவ்தாஸ் மீனா தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேலாண்மை இயக்குனர் தட்சிணாமூர்த்தி , நகராட்சி நிர்வாக இயக்குனர் பொன்னையா, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. விழாவில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

பின்னர் தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை,எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி இன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி தமிழ்நாடு குடிநீர் வாரியம் சார்பில் இராதாபுரம்வள்ளியூர், நாங்குநேரி, களக்காடு, பாளையங்கோட்டை மற்றும் சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூபாய் 605.75 கோடி மதிப்பிலான கூட்டு குடிநீர் திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு 2 வருடங்களில் பல்வேறு திட்டங்களை அறிவித்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது அதில் மகளிர் நகர பேருந்துகளில் கட்டணமில்லா பயணத் திட்டம்,மாணவ மாணவியர்களுக்கு புதுமைப்பெண் திட்டம், ஏழை,எளிய மக்களுக்காக மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் திட்டம் என இது போன்று பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து கூட்டுக்குடிநீர் திட்டம் இராதாபுரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.இந்த கூட்டுக்குடிநீர் திட்ட பணிகள் 18 மாதங்களில் முடிவடையும். இத்திட்டம் முடிவடைந்தால் 831 ஊரக குடியிருப்பில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்படும். எனவேஅனைத்து தரப்பு மக்களுக்கும் சமமான முறையில் குடிநீர் கிடைக்கும்.இது போன்ற அற்புதமான கூட்டு குடிநீர் திட்டத்தை வழங்கியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெல்லை மாவட்ட மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

அதன் பின்னர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க நெல்லை மாவட்டத்தில் கூட்டு குடிநீர் திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் உள்ள இராதாபுரம்(179 குடியிருப்புகள்)வள்ளியூர் (171 குடியிருப்புகள்)நாங்குநேரி(259குடியிருப்புகள்) களக்காடு (141 குடி யிருப்புகள்)சேரன்மகாதேவி (22 குடியிருப்புகள்)பாளையங்கோட்டை(41 குடியிருப்புகள்) ஆகிய ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட 831 ஊரக குடியிருப்புக்கான கூட்டுக்குடிநீர் திட்டம் ரூபாய் 605.75 கோடிகளுக்கு ஜல் ஜீவன் மிஷன் நிதி மூலம் நிறைவேற்றப்பட உள்ளது.

இத்திட்டம் இடைக்கால மக்கள் தொகை (2039) 3.8 லட்சம் மக்களுக்கு 18.79 மில்லியன் லிட்டர் உச்ச காலம் (2054)மக்கள் தொகை 3.66 லட்சம் மக்களுக்கு 22.79 மில்லியன் லிட்டர் வீதம் குடிநீர் வழங்க வடிவமைக்கப் பட்டுள்ளது. இத் திட்டம் ஊரக குறிப்புகளில் தினமும் நபர் ஒன்றுக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஒன்றியம் மேல முன்னீர் பள்ளம் அருகில் தாமிரபரணி ஆற்றில் ஒரு நீர் எடுப்பு கிணறு அமைக்கப்பட உள்ளது.நீர் சேகரிப்பு கிணற்றின் மூலம் பெறப்படும் நீர் புதிதாக சிங்கிகுளம் கிராமத்தில் அமைக்கப்பட உள்ள 2279 லட்சம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு பிரண்டை மலையில் உள்ள 9.50 லட்சம் மீட்டர் கொள்ளளவு உள்ள முதலாவது தலைமை மேல் நிலை நீர் தேக்க தொட்டிக்கு நீரேற்றும் செய்யப்பட உள்ளது.பின்னர் அங்கிருந்து 8.20 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள தெற்கு வள்ளியூர் தலைமை மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிக்கும்,இராதாபுரம் தலைமை மேல் நிலை 310 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள 303.88 கிலோ மீட்டர் நீளமுள்ள குழாய்கள் வழியாக நீரேற்றம் செய்யப்பட உள்ளது.

மேற்கண்ட 3 தலைமை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் இருந்து 54 தரைமட்ட நீட் தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் கொண்டு செல்லப்படுகிறது. பின்னர் 569.50 கிலோ மீட்டர் கிளை நீர் உந்து குழாய்கள் மூலம் பயன்பாட்டில் உள்ள 176 மேல் நிலை நீர் தேக்க தொட்டிகள் மற்றும் புதிதாக கட்டப்பட உள்ள 182 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றப்பட உள்ளது.மேல் நிலை நீர் தேக்க தொட்டிகளில் இருந்து ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள மற்றும் புதிதாக அமைக்கப்பட உள்ள பகிர்வான குழாய்கள் மூலம் பயனாளிகளுக்கு குடிநீர் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 65,434 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் முடிவுற்ற பயனுக்கு வரும் போது 2,91,097 மக்கள் பயன்பெறுவார்கள். தமிழ்நாடு முழுவதும் பேருந்து வசதி, மருத்துவமனைகள், சாலை வசதி என 24 மாதங்களில் பல்வேறு பணிகளை செய்து முடித்துள்ள, இப்படி மக்கள் மீது அக்கறை கொண்டு செயல்பட்டுவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தொடர்ந்து நீங்கள் ஆதரவு தர வேண்டும்.

இவ்வாறு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

அதனைத் தொடர்ந்து விழாவில் சமூக ரெங்கபுரம் ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூபாய் 1 கோடி கடன்களை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அமைச்சர்கள் கே.என்.நேரு,ராஜ கண்ணப்பன்,மனோ தங்கராஜ் ஆகியோர் வழங்கினர்.

முன்னதாக வள்ளியூரில் நடைபெற்று வரும் புதிய பேருந்து பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் கே.என்.நேரு,ராஜ கண்ணப்பன்,மனோ தங்கராஜ் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

நிகழ்வில் ரகுபதி, செந்தூர்பாண்டி , கணேஷ்குமார்,அலெக்ஸ் அப்பாவு, கே.எஸ்.தங்கபாண்டியன், சித்திக்,கனகராஜ்,பரமசிவம் ஐயப்பன்,ஜோசப் பெல்சி, ஆரோக்கிய எட்வின் , பேர்வெல் கணேசன், பி.சி.ராஜன், சாலமன் டேவிட் லிங்க சாந்தி,ஜான்ஸ் ரூபா, ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன் மீனவர் அணி எரிச்சூடு, உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு

பொதுப்பணித்துறை

கட்டடம் (க&ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை – 5

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 03 கட்டட (க&ப) வட்டம் / 2023–2024/ நாள்: 23.05.2023

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை: மொத்த வகை / இன விலை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க(ம)ப) வட்டம், சென்னை – 5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

வ. எண்	பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை	பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை	காலம்	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு
1	சென்னை-3, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள நோயியல் தொகுதியை நரம்பியல் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை துறைக்கான தொகுதியாக மாற்றியமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பணி. மு.வை.தொகை: ரூ. 89,000/–	ரூ. 157.60 இலட்சங்கள்	6 மாதங்கள்	வகுப்பு IV
2	செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் உள்ள ஜவஹர்லால் நேரு விருந்தினர் மாளிகையை (தொழிலாளர் வாரிய விருந்தினர் மாளிகை) புதுப்பிக்கும் பணி. மு.வை.தொகை: ரூ. 79,100/–	ரூ. 138.10 இலட்சங்கள்	8 மாதங்கள்	வகுப்பு IV
3	திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூடியில் கிளை நூலகக் கட்டடம் கட்டும் பணி. மு.வை.தொகை: ரூ. 55,500/–	ரூ. 90.50 இலட்சங்கள்	7 மாதங்கள்	வகுப்பு IV

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 20.06.2023 மாலை 03.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 20.06.2023 மாலை 04.00 மணி

செ.ம.தொ.இ/2738/ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை – 5

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி3/1846&1847/2023 **மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு மறு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது

பணியின் விவரம்	பணியின் மதிப்பு (தோராயமாக 18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்)	முன் வைப்புத் தொகை	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை
பே.சா.து.ந.க.எண்.பி3/1846 & 1847 /2023 பேருந்து சாலைகளில் மண்டலம் I முதல் VIII மற்றும் IX முதல் XV வரை உள்ள ஒட்டு பணிகளை கோல்டு மிக்ஸ் இன்ஜெக்ஷன் பாத்ஹோல் பேட்ச்சிங் ரிப்பேரிங் மெஷின் **(Coldmix Injection Potholes Repairing Machine)** மூலம் மேற்கொள்ளும் பணி **(2 பணிகள்)**	**பணியின் மதிப்பு ரூ.193.00 இலட்சங்கள் & பணியின் மதிப்பு ரூ. 193.00 இலட்சங்கள்**	**பணியின் மதிப்பில் 1 சதவீதம்**	**முதல் வகுப்பு**

ஒப்பம் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **13.06.2023 மாலை 3.00 மணி**
ஒப்பம் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **14.06.2023 மாலை